[30th April 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: சேலத்தைப் பொறுத்த வரை எவ்வளவு கல்லூரிகள் இருக்கின்றன என்ற விவரம் என்னிடத்தில் இல்லே. நம்முடைய இலக்கு ஒரு ஜில்லாவிற்கு ஒரு கல்லூரி இருக்கவேண்டும் என்பது. இந்த கல்லூரியில் பெண்கள் சேருவதற்கும் இடம் இருக்கிறது.

SRI C. NATARAJAN: சேலத்தில் பெண்கள் கல்லூரி ஏற்படுத்த தனியார் முன்வந்திருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் இதைப் பற்றி மனு செய்துக்கொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதற்குத் தனிக்கேள்வி கொடுத்தால் பதில் சொல்லுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR- சேலம் பெரிய ஜில்லாவாக இருந்தும் கூட ஆண்களுக்காக இருந்த கல்லூரி முனிசிபாலிடி நடத்திக்கொண்டிருந்ததை இப்போது சர்க்கார் எடுத்துக் கொண்டார்கள். வேறு எங்காகிலும் ஒரு கல்லூரி ஆரம்பிப்பதற்குக் கேட்டுக்கொண்டால், இதைப் பற்றி யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: சபை முன் இருக்கும் கேள்வி பெண்கள் கல்லூரியைப் பொறுத்தது. தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI R. KRISHNASWAMI NAIDU: ராமனுதபுரம் ஜில்லாவில் பெண்கள் கல்லூரி இல்லே. ஒரு பெண் கல்லூரியை ஆரம்பிக்க தனியார் முன்வந்தால் சர்க்கார் போதிய ஆக்கம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கல்லூரி அங்கு ஒன்று இருந்தது. இதில் போதிய மாணவிகள் வராததினுல் இது மூடிவிடப்பட்டது.

SRI A VEDARATHNAM: ஆண்கள் கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்கலாம் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு கல்லூரி ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: முக்கியமாக உயர்நிலேப் பள்ளி அளவிலேதான் செய்ய வேண்டுமென்று சொன்னேன். கல்லூரியைப் பொறுத்தவரையில் அம்மாதிரிச் சொல்லவில்லே. அப்படி பெண்களுக்காக ஒரு கல்லூரியில்லாததினுல் பெண்கள் படிக்காமல் இருப்பது நல்லது அல்ல என்று சொல்லவிரும்புகிறேன்.

Assault on a Syce by a doctor of the King Institute, Guindy

*899 Q.—SRI K. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that in December, 1959 a Doctor of the King Institute assaulted a Syce causing him injuries;

30th April 1960]

(b) whether any enquiry was conducted in the matter; and

(c) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) No, Sir.

(b) & (c) Do not arise.

Ramanaickenpalayam-Kil Avarai Road

*900 Q.—SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there is any proposal with the Government to extend the Ramanaickenpalayam-Kil Avarai road to a centrally situated village in Chinna Kalyanan Hills;

(b) if so, the estimated cost of road; and

(c) the approximate date by which the road is expected to be completed?

THE HON. SRI P. KAKKAN: (a) No, Sir.

(b) & (c) Do not arise.

Dam across Ramanathi

*901 Q.—SRI D. S. AUTHIMOOLAM: Will the Hon. the Minister for Works be pleasel to state the present stage of work of construction of a dam across Ramanathi in Ambasamudram taluk?

THE HON. SRI P. KAKKAN: The Plans and Estimates for the scheme have been received. As this is one of the schemes proposed for inclusion in the Third Five-Year Plan, the question of sanctioning the estimate will be considered after a final decision is taken in regard to the selection of schemes in the Third Five-Year Plan by the Planning Commission.

SRI D. S. AUTHIMOOLAM: இந்த ரிசர்வாயருக்கு எஸ்டிமேட் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இந்தத் திட்டத்திற்கு டாப் பிரையாரிட்டி கொடுத்து வேலே ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு எதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: இந்த திட்டத்திற்கு டாப் பிரையாரிடி கொடுப்பதற்கு இடம் இல்லே என்று நினைக்கிறேன்.

The scheme is estimated to cost Rs. 15.86 lakhs.

Hindi College

*903 Q.—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) ஹிந்தி கல்லூரிக்காக மத்திய அரசாங்கம் அளிக்க முன் வந்திருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) இதில் கட்டிடம் முதலிய நிரந்தரச் செலவுக்கு அளிக்கும் தொகை எவ்வளவு ?